WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 06

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:06 | 07.11.2023 செவ்வாய்க்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# பதவி விலகுகிறார்



# விளையாட்டுத்துறை அமைச்சர்?

முன்னாள் கிரிக்கெட் வீரர் அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் (எஸ்.எல்.சி) இடைக் கால குழுவை நியமிப்பது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது, இலங்கை கிரிக்கெட் துறை எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விசேட அமைச்சரவை உப குழு நியமிப்பு ஆகியவற்றால் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பதவி விலகுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவையடுத்து, விளையாட்டுத் துறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக் கால....

(பக் :02)

## இலங்கைக்கு முட்டை ஏற்றுமதியாவதால் நாமக்கல் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி

நாமக்கல்லில் இருந்து இலங்கைக்கு தினமும் 10 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுவதால் அந்தப் பகுதி கோழி பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இலங்கையில் கடந்த ஒரு ஆண்டாக பெரும் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. பணவீக்கத்தால் பொருட்களின் விலை பலமடங்கு உயர்ந்து பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இலங்கை பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வரப் போராடி வருகிறது. இதைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள 2 கோழி பண்ணைகளில் இருந்து முதல் கட்டமாக 2 கோடி முட்டைகள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதில் 1 கோடி முட்டைகள் வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையிலுள்ள கால்நடை உற்பத்தி துறை மற்றும் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேசன் (எஸ்.டி.சி.) அதிகாரிகள் தமிழகம் சென்று தமிழகத்தில் முட்டை உற்பத்தியில் முன்னணி மாவட்டமாக திகழும் நாமக்கல்லிலுள்ள 5 கோழி பண்ணைகளை நேரில் பார்வையிட்டு, முட்டையின் தரத்தை ஆய்வு செய்தனர்...

(பக் :02)

## யாழ்ப்பாணத்தில் பார்வைக் குறைபாடு நோயதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் பார்வைக்குறைபாட்டினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மு.மலரவன் தெரிவித்துள்ளார். கண்ணில் பார்வைக் குறைவு ஏற்படுவதற்கு வென்புறை, கண்ணாடி அணிதல், நீரிழிவு நோய், வயது காரணமாக வருகின்ற விழித்திரு நோய் ஆகியன முக்கிய காரணங்களாக உள்ளன...

(பக் :02)

## இஸ்ரேலுக்குச் செல்லும் 10,000 இலங்கையர்

இலங்கையிலிருந்து 10,000 பண்ணை தொழிலாளர்களை இஸ்ரேலில் வேலைக்கு அமர்த்துவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் மோஷே ஆர்பெல் மற்றும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டாரநாயக்க ஆகியோர் இது தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை விவசாயத் தொழிலாளர்கள் எதிர்வரும் வாரங்களில் வரவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே 4,500 இலங்கைத் தொழிலாளர்கள் இஸ்ரேலில் வீட்டு பராமரிப்புத் துறையில் பணிபுரிவதாக தெரிவிக்கப்படுகிறது...

(பக் :02)





# முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு யாழ் ஊடக அமையத்தினர் கள ஆராய்வு





## பதவி விலகுகிறார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவின் பணிகள் 14 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் இலங்கை கிரிக்கெட் சபைக்கான இடைக்கால குழு நியமனம் தொடர்பான வர்த்தமானி நேற்று (06.11.2023) வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு முட்டை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் முட்டைகளை தங்கள் நாட்டில் இறக்குமதி செய்ய பண்ணையாளர்களுக்கு அனுமதி அளித்தனர். இந்த 5 கோழிப்பண்ணைகளில் இருந்தும் தினசரி 10 லட்சம் முட்டைகள் இறக்குமதி செய்ய உள்ளதாக, இலங்கை ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேசன் தலைவர் அசின் வலிசுந்தரா தெரிவித்தார். இறக்குமதி செய்யப்படும் முட்டைகள், இலங்கையில் உள்ள பெரிய பேக்கரிகள், பிஸ்கட் உற்பத்தியாளர்கள், சமையல் காண்ட் ராக்டர்கள், ஹோட்டல்களுக்கு, ஒரு முட்டை விலை 35 (இலங்கை மதிப்பு) விலைக்கு விநியோகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு தினமும் 10 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி ஆவதால் நாமக்கல் கோழி பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## இஸ்ரேலுக்குச் செல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காஸா போரினால் இஸ்ரேலின் விவசாயத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 7 முதல், விவசாயத் துறையில் 30,000 வெளிநாட்டுத் தொழிலாளர்களில் சுமார் 8,000 வெளிநாட்டு விவசாயத் தொழிலாளர்கள் இஸ்ரேலை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது மட்டுமன்றி ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலினால் பெரும்பாலான வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் சிலர் பணய கைதிகளாகவும் பிடித்துச்செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை சுமார் 20,000 பாலஸ்தீனிய விவசாய தொழிலாளர்கள் இஸ்ரேலுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முக்கியமாக எங்களுடைய உணவு பழக்கவழக்கங்களில் நாங்கள் கூடுதலான பழ, மரக்கறி வகைகள் நாங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்தோடு நாளாந்தம் சூரிய ஒளியின் அளவு கண்ணில் படுவதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்களும் ஏனையவர்களும் அனைவரும் நவீன தொலைத்தொடர் சாதனங்களின் (டிவைஸ்) நேரத்தை குறைக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் காலநிலை மாற்றங் களும் இக்கண் நோய்கள் அதிகரிக்கக் காரணமாகவுள்ளன.

# இளைஞனின் தாக்குதலில் இஸ்ரேல் பொலிஸ் பலி

ஜெருசலேமின் பழைய நகர் அருகே உள்ள காவல் நிலையத்துக்கு வெளியே, இஸ்ரேல் எல்லை காவல் படையைச் சேர்ந்த பெண் காவல் அதிகாரி எலிஷே வா ரோஸ் இடா லுபின் (வயது 20) என்பவர் பாது காப்புப்பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். அப்போது, 16 வயது பாலஸ்தீனிய இளைஞர் ஒருவர், திடீ ரென அவர் மீது கத்தியால் குத்தியுள்ளார். இதில் படு காயமடைந்த லுபின் பின் னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டார். இந் தத் தாக்குதல் சம்பவத்தில் லுபினுடன் பணியிலிருந்த மற்றொரு காவல் அதிகா ரிக்கும் காயமேற்பட்டது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தத் தாக்குதலில், பாலஸ்தீனி யருக்கு உதவியாக செயல் பட்ட மற்றொரு நபர் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் என இரு நாட்டு குடிமகளான லுபின், 2021 ஆம் ஆண்டு இஸ்ரே லுக்கு புலம்பெயர்ந்துள் ளார்.



# பாலஸ்தீனர்களைக் கொல்ல அமெரிக்கா ஊக்குவிக்கிறது ஈரான் ஜனாதிபதி

இஸ்ரேல்-ஹமாஸ் போர் உக்கிரமடைந்து வரும் நிலையில், காஸா பகுதியில் உள்ள பாலஸ்தீனர்களைக் கொல்ல இஸ்ரேலை அமெ ரிக்கா ஊக்குவிக்கிறது என ஈரான் ஜனாதிபதி இப்ரா ஹிம் ரெய்சி குற்றம்சாட்டி யுள்ளார்.

காஸாவில் ஒரே மாதத் தில் 3 ஆவது முறையாக தொலைத்தொடர்பு முடக் கப்பட்டுள்ளது. ஹமாஸ்-இஸ்ரேல் மோதலில் இது வரை 9,700 க்கும் மேற் பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 4000 க்கும் மேற்பட்டோர் குழந்தை கள். இஸ்ரேலில் 1,400 பேர் பலியாகியுள்ளனர்.



242 பேர் ஹமாஸ் படை யினரால் பிணைக் கைதிக ளாகப் பிடித்துச் செல்லப் பட்டனர்.

# சத்தீஸ்கர், மிசோரமில் ஆர்வமாக வாக்களிக்கும் பொதுமக்கள்



ஐந்து மாநில தேர்தல் திகதிகள் ஏற்கெனவே அறி வித்ததன்படி, சத்தீஸ்கர், மிசோரம் ஆகிய மாநிலங் களில் இன்று காலை வாக் குப்பதிவு தொடங்கியது.

அடுத்த ஆண்டு நடை பெற உள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான முன்னோட் டமாகத்தான், தற்போது நடைபெற்று வரும் 5 மாநில தேர்தல் கருதப்படு கிறது. காங்கிரஸ் ஆளும் ராஜஸ்தான் மற்றும் சத் தீஸ்கர், பா.ஜ.க ஆட்சி செய்யும் மத்திய பிரதே சம், சந் திரசேகரராவ் முதலமைச்சராக உள்ள தெலங்கானா மற்றும் மிசோ தேசிய முன்னணிக் கட்சி ஆளும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் தேர்தல் நடைபெற உள் ளது. அதில் முதற்கட்ட மாக சத்தீஸ்கர், மிசோரம் மாநிலங்களில் இன்று வாக் குப்பதிவு நடைபெறுகி றது.

சத்தீஸ்கர் மாநில சட்ட மன்ற தேர்தல்களுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், சுக்மா மாவட்டத்தில் ஒரு IED குண்டுவெடிப்பு நிகழ்ந் துள்ளது. இதில் CRPF இன் உயரடுக்கு பிரிவான கோப்ராவின் கமாண்டோ ஒருவர் காயமடைந்தார். நக்சலைட்கள்தான் இந்த குண்டு வெடிப்புக்கு கார ணம் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

# ஈரான் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்ட மோடி

காஸா மீதான தாக்கு தல், மனிதாபிமான உதவி களை அதிகரிக்க எடுக்கப் பட வேண்டிய நடவடிக் கைகள் ஆகியன தொடர் பாக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியுடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயி லாக பேசியுள்ளார்.

பிரதமர் நரேந்திரமோடி தனது எக்ஸ் வலைத்தளத் தில் ஈரான் ஜனாதிபதியு டனான தனது பேச்சு வார்த்தை குறித்து பதிவிட் டுள்ளார்.

அப்பதிவில் மோடி, “இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் காரணமாக மேற் காசியாவில் நிலவும் கடின மான சூழல் குறித்து கருத் துகள் பரிமாறிக் கொள்ளப் பட்டது. பயங்கரவாதம், வன்முறைகள், மக்களின் உயிரிழப்புகள் கவலைய ளிப்பதாக இருக்கிறது.

எனவே, போர் தீவிர மடைவதைத் தடுப்பது, தொடர்ந்து மனிதாபி மான உதவிகளை உறுதி செய்வது குறித்தும், அமை தியை விரைவில் மீட்டெ டுப்பதன் அவசியம் குறித் தும் கலந்துரையாடி னோம். மேலும் காஸா மீதான இஸ்ரேலின் தாக்கு தலை முடிவுக்குக்கொண்டு வர இந்தியா அனைத்து திறன்களையும் பயன்படுத் தும் என இப்ராஹிம் ரைசி எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

# நியூயோர்க் வீதியில் பச்சை நிற தண்ணீர்

நியூயோர்க் வீதியில் பச்சை நிறத்தில் தண்ணீர் உள்ள படங்கள் சமூக வலைத்தளங்களில் வைர லாகிவருகி றது.

சாக்கடை கள், கழிவு நீர்க் குழாய்க ளில்ஏற்பட்ட கசிவு கார ணமாக இது போன்று பச்சை நிறத் தில் திரவம் வீதியில் ஓடி இருக்கலாம் என தெரி விக்கப்பட்டுள்ளது. இது வெப்பமயமாக்கல் காரண மாக நிகழ்ந்திருக்கலாம், நிலத்தடி நீர் பிரச்சி னையை ஏற்படுத்தலாம் என்பது போன்று பல வேறு கருத்துகளை மக் கள் பதிவிட்டனர்.



“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# அரசியல்வாதிகளின் விளையாட்டு அரசியல்

உலகக்கிண்ணப் போட்டியில் இலங்கை படு மோசமான தோல்விகளைச்சந்தித்து வருகிறது. இந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்பது யார்? என்ற கேள்வி ரசிகர்களின் மத்தியில் எழுந்துள்ளது.

விளையாட்டு அணி ஒன்று தோல்வியடைந்தால் முதலில் பலியாவது அணித்தலைவர், அடுதது பயிற்சியாளர். உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இலங்கை கிறிக்கெட் சபைச்செயலாளர் இராஜினாமா செய்துவிட்டார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி கிறிக்கெட் சபையைக் கலைத்துவிட்டு இடைக்கால குழு ஒன்றை நியமித்துள்ளார்.

உலகக்கிண்ணத்தை வென்ற இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் ஏழுபேர் கொண்ட இலங்கை கிறிக்கெட் (எஸ்.எல்.சி) இடைக்காலக் குழுவை விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க திங்கட்கிழமை நியமித்துள்ளார். அதில் மூன்று முன்னாள் நீதியரசர்களும் இடம் பெற்றுள்ளனர்.

அத்தகைய குழுவொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும், புதிய இடைக்கால குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கிரிக்கெட் சபைக்கு இவ்வாறானதொரு இடைக்காலக் குழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகள் ஊடாகவே ஜனாதிபதிக்கு தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை தொடர்பு கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் முயற்சித்தும் இதுவரை அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் செய்தி பரபரப்பாக வெளியான வேளை நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட் துறை எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைகளுக்குத் தீர்வுகாண விசேட அமைச்சரவை உப குழுவொன்றை நியமிக்க அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த உப குழுவின் தலைவராக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் அதன் உறுப்பினர்களாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கை கிரிக்கெட்டில் நிலவும் பிரச்சினைகளை துரிதமாக தீர்ப்பதற்கான பரிந்துரைகளை செய்வதே இந்த உப குழுவின் பொறுப்பாகும்.

அர்ஜுன ரணதுங்கவை தலைவராகக் கொண்ட இலங்கை கிரிக்கெட் அணிக்கான இடைக்கால குழுவுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.


உதைபந்தாட்டம், ரக்பி ஆகிய விளையாட்டுகளில் அரசியல் தலையிட்டதால் உலகளவில் தடை செய்யப்பட்டன. அப்படி ஒரு நிலை இலங்கைக்கு வரக்கூடாது என்பதே ரசிகர்களின் விருப்பமாகும்.

# கல்குடா விவசாயிகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிய ஹாபிஸ் நசீர் அஹமட்

கல்குடா தொகுதியில் வசிக்கும் பெரும்பாலான விவசாயிகளின் விவசாய நிலங்களைக் கொண்ட பிரதேசமாக கிடச்சிமடு ஆத்திச்சேனை மாக்குப்பை எனும் விவசாயம் மேற்கொள்ளும் இடங்களாகும். விவசாய நிலங்களுக்கு செல்லும் வீதியானது குன்றும் குழியுமாகக் காணப்பட்டு விவசாயிகள் தங்கள் அறுவடை காலத்தில் நெல் மூடைகளை கொண்டு செல்வதில் கடுமையான கஷ்டத்தை அனுபவித்து வந்தனர்.

இவ்வீதியினை அமைச்சரின் காலத்தில் செப்பனிடப்பட வேண்டும் என்று அயராது உழைத்து தொடர்ச்சியாக அமைச்சரின் கவனத்திற்கு காவத்தமுனை வட்டார அமைப்பாளரான சியாம் ஹாபிஸ் கொண்டு சென்றதன் பலனாக அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் ரிதிதென்னை தொடக்கம் மாக்குப்பை வரையிலான 06 க்ம் வீதியானது காபட், கொங்ரீட் வீதியாக 100 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

வீதி அபிவிருத்தி பணிக்காக கல்குடா பிரதேசத்தில் பௌண்ட்ரி வீதி, மத்திய வீதி - ரிதிதென்னை, பொத்தானை வீதி, வாகனேரி ஆகிய வீதிகள் முன்னாள் அமைச்சரின் முன்மொழிவுக்கு உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் அபிவிருத்தி செய்வதற்கான அனுமதி கிடைத்து அதற்கான வேலைகள் விரைவில் இடம்பெற இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஜனநாயகத்தையும் மக்களின் கருத்து சுதந்திரத்தையும் கைது செய்து கூட்டில் அடைத்துள்ளனர்




ஜனநாயக ரீதியாக போராடிய மாணவர்களாகிய எங்களை இலங்கை பொலிஸார் கைது செய்து கூட்டில் அடைத்தது இலங்கை ஜனநாயகத்தையும் மக்களின் கருத்து சுதந்திரத்தையும் கைது செய்து கூட்டில் அடைத்ததற்கு சமனானது, எனவே தம்மைக் கைது செய்ததை வன்மையாகக் கண்டிப்பதாக கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

மட்டு மேச்சல் தரை பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்த மாணவர்கள் மட்டு ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை (06) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மயிலத்தமடு மாதவனை மேச்சல்தரை பிரச்சினை நீண்டகாலமாக தீர்த்து கொள்ளாத நிலையில் பண்ணையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழில் இருந்து ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பண்ணையாளர் போராட்ட இடத்துக்கு வந்திருந்தோம், அங்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து அமைதியாக ஜனநாயக ரீதியாக பொதுப்போக்குவரத்துக்கு இடையூறுகள் எதுவும் விளைவிக்காத நிலையில் எமது உரிமை போராட்டத்தில் ஈடுபட்டோம்.

பின்னர் பண்ணையாளர்களுடன் உரையாடி விட்டு கிழக்கு பல்கலைக்கழத்திற்கு பஸ்வண்டியில் சென்று யாழ் நோக்கி திரும்பும் போது சந்தி வெளி பொலிஸார் எமது பஸ்வண்டியை வழிமறித்து எங்கள் 6 மாணவர்களை இழுத்து கைது செய்தனர்.

இலங்கையில் ஜனநாயக ரீதியில் முடக்கப்படுவதற்கு எதிராக போராட்ட சுதந்திரம் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது எங்களை கைது செய்ததன் மூலம் எங்களது ஜனநாயகம் மீண்டும் ஒரு கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகரீதியாக அடக்கப்படுகின்ற மக்கள் தங்கள் சுதந்திரத்தை மீட்டெடுக்கும் போது ஜனநாயக வழிரீதியான போராட்டம் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதை பல்கலைக்கழக மாணவர்கள் வன்மையான கண்டனம் தெரிவிக்கின்றோம்.

அதேவேளை எங்கள் நிலங்கள் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படுகின்ற ஜனநாயத்துக்கு முரணான செயல்களில் இருந்து விடுதலை பெறுவதற்கு தொடர்ந்து குரல் கொடுப்போம் என்றனர்.

# துரிதகதியில் யாழ் நகரமண்டப புனரமைப்புப்பணி



நவீன அலுவலகங்கள், வாகனத்தரிப்பிடம் போன்ற பல்வேறுபட்ட வசதிகளுடன் புனரமைக்கப்படும் யாழ்ப்பாண நகர மண்டபத்தின் முதற் கட்ட பணிகள் அடுத்த வருடம் நிறைவடையும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்ட நிர்மானப் பணிகளுக்காக 600 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. முழுக்க முழுக்க திறைசேரியில் இருந்து நிதியளிக்கப்பட்ட திட்டமாகும்.

மொத்த மதிப்பிடப்பட்ட தொகை 2350 மில்லியன் ரூபா ஆகும். யாழ்ப்பாண நகர மண்டபத்தின் நிர்மானப் பணிகள் 2022 நவம்பரில் முடிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் கொவிட்-19 பரவல் மற்றும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக, இத்திட்டத்தின் நிர்மானப் பணிகள் தாமதமானது. எனினும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகப் பதவியேற்றதன் பின்னர் யாழ்.நகர மண்டபத்தின் நிர்மானப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு விஷேட அடையாள அட்டை

தேர்தலில் வாக்களிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு விஷேட அடையாள அட்டை வழங்கப் போவதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயக்கம் சமன் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

10 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தலா 500 மாற்றுத் திறனாளிகளுக்கு முதல் கட்டமான அடையாள அட்டை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## 14ஆவது தடவையாக செயலிழந்த வைத்தியசாலையின் மின்தூக்கி

வவுனியா பொது வைத்தியசாலையின் மின்தூக்கி கடந்த சில தினங்களில் பதினான்காவது முறையாக செயலிழந்தது. அதில் சிக்கியவர்களை காப்பாற்ற ஊழியர்கள் சுமார் நாற்பது நிமிடங்கள் போராடினர். லிப்ட் அடிக்கடி பழுதடைவதால் இதுபோன்ற சமயங்களில் மருத்துவமனை ஊழியர்கள் ஆபத்தான நோயாளிகளை சக்கர நாற்காலிகளில் ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறான சமயங்களில் அருகில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து இராணுவத்தினர் வவுனியா பொது வைத்தியசாலைக்கு வந்து உதவுகின்றனர்.

வவுனியா பொது வைத்தியசாலையின் பழுதுபார்ப்பதற்காக இதுவரை செலுத்தப்பட்ட பாரிய தொகையில் பழைய மின்தூக்கிக்கு பதிலாக புதிய மின்தூக்கியை நிறுவியிருக்கலாம் என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



## போராட்டம் நடத்தத் தயாராகும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள்

தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் பயணச் செலவு அதிகரிப்பு என்ற தலைப்பில் பொது சுகாதார பரிசோதகர் கடந்த மாதம் 10 ஆம் திகதி சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்கள்.

இருபத்தி ஐந்தாம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்திற்கு சாதகமான தீர்வுகள் வழங்கப்படாததால் தொழிற்சங்கப் போராட்டம் நடத்தப் போவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அனுப்பிய கடிதத்தில், எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வழங்கும் சகல அறிக்கைகளும் இடைநிறுத்தப்படுவதுடன் முன்னேற்ற மீளாய்வு உள்ளிட்ட சகல கூட்டங்களிலும் பங்கேற்பதும் இடைநிறுத்தப்படும் எனவும், எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் டெங்கு ஒழிப்புக் கடமைகளில் இருந்தும் 22 ஆம் திகதி அனைத்து தொற்று நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தும் விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும், எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் சகல களப்பணிகளில் இருந்தும் விலகி பதினைந்தாம் திகதி முதல் மாகாணங்களில் ஆர்ப்பாட்டங்களை நடாத்தவுள்ளதாகவும் அன்றைய தினம் சுகாதார அமைச்சுக்கு முன்பாக பேரணியாகச் சென்று ஈடுபடவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் 25 வீடுகள் சேதம்

வியாங்கொட, வந்துரவ ஆகிய பகுதிகளில் வீசிய பலத்த காற்றினால் மரங்கள் முறிந்து வீழ்ந்து 25 வீடுகள் சேதமடைந்துள்ளன.



ராஜாங்கனை, அங்கமுவ, கலா ஓயா, உடவலவை, தப்போவ, முருதவெல ஆகிய நீர்த்தேக்கங்களில் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் நீர்த்தேக்கங்களைச் சூழவுள்ள தாழ் நிலங்களில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீ ஓயா, ஊறு பொகு ஓயா, உடவலவை ஓயா, கலா ஓயா, அத்தனகலு ஓயா மற்றும் நில்வலா கங்கை போன்றவற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் எஸ்.பி.சி. சுகீஸ்வர தெரிவித்தார்.

இதேவேளை பதுளை, கண்டி, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை இன்று (07) வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனா தீர தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் இன்று (07) பிற்பகல் 1 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, வடமேற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.




# டைம் அவுட் விதிப்படி ஆட்டமிழந்த முதல் வீரர்

உலகக் கிண்ணத் தொடரில், பங்களா தேஷ், இலங்கை அணிகள் மோதின. டெல்லி இந்தப் போட்டியில் 'டைம் அவுட்' விதிப்படி ஒரு பந்தைக்கூட எதிர் கொள்ளாத மேத்யூஸ் இற்கு அவுட் வழங்கப் பட்டது.

இந்தச் சம்பவம் இப்போது சர்ச்சையை கிளப்பியிருக்கிறது. ஆண்கள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் 'டைம் அவுட்' விதிப்படி ஆட்டமிழந்த முதல் வீரர் மத்யூஸ் தான்.

இந்தப் போட்டியின் 25 ஆவது ஓவரை ஷகிப் அல் ஹசன் வீசியிருந்தார். இந்த ஓவரின் இரண்டாவது பந்தில் சமரவிக்ரமாவின் விக்கெட்டை ஷகிப் அல் ஹசன் வீழ்த்தியிருந்தார். அஞ்சலோ மத்யூஸ் களமிறங்க வேண்டும். மைதானத்துக்குள் சென்ற பின்னர் அவரின் ஹெல்மட்டில் ஏதோ பிரச்சினை ஏற்பட வேறு ஹெல்மட்டை எடுத்துவருமாறு சைகை செய்தார். வேறு ஹெல்மட்டை எடுத்து வந்தபோது மத்யூஸ் தாம தமாவதாக பங்களாதேஷ் வீரர்கள் அப்பீல் செய்தனர்.

கலந்தாலோசித்த நடுவர்களும் 'டைம் அவுட்' முறைப்படி மத்யூஸுக்கு அவுட் கொடுத்தனர்.




இந்த விதிமுறையை பொறுத்துவரைக்கும் ஒரு துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்த பின்போ அல்லது ரிட்டையர் ஹர்ட் முறையில் வெளியேறினாலோ அடுத்து வரக்கூடியவீரர் 3 நிமிடங்களுக்குள் கிரீஸுக்குள் வரவேண்டும், ஐ.சி.சியின் விதி எண் 40.1.1 கூறுகிறது. இந்த விதிமுறை பிளேயிங் கண்டிஷனைப் பொறுத்து 2 நிமிடங்களாக மாற்றப்படத் தகுந்ததே. அதன்படி, உலகக் கிண்ணம் போன்ற போட்டிகள் என்றால் அதுவே இரண்டு நிமிடங்களுக்குள் வீரர் கிரீஸுக்குள் வந்து அடுத்த பந்தை சந்திக்க வேண்டும் என்பது விதி. அப்படி வராத பட்சத்தில் நடுவர்கள் 'டைம் அவுட்' எனப்படும் அவுட் வழங்கலாம் என்றும் கூறுகிறது அதே விதி. என்றாலும், இந்த முறையிலான அவுட்டுக்கு பந்து வீச்சாளர்கள் யாருக்கும் எந்த கிரெடிட்டும் வழங்கப்படாது. மாறாக, ரன் அவுட் போல இந்த டைம் அவுட் வழங்கப்படும். ஐ.சி.சி வகுத்துள்ள இந்த விதி, நீண்டகாலமாகவே இருந்துவந்தாலும் எந்த அணியின் இதுவரை இந்தவிதியை பயன்படுத்தியதில்லை

இலங்கை அணி 24.2 ஓவர்களில் 135 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்தது. நான்காவது விக்கெட்டாக சமரவிக்ரமா அவுட் ஆன பின், இலங்கையின் அனுபவ வீரர் ஏஞ்சலோ மேத்யூஸ் களமிறங்க வந்தார். ஆனால், தான் அணிந்து வந்த ஹெல்மெட் ஸ்ட்ராப் சரியாக இல்லாததால் அதனுடன் போராடிக்கொண்டிருந்தார் மேத்யூஸ். இதனால் முதல் பந்தை எதிர்கொள்ள தாமதமாக்கினார்.

ஹெல்மெட்டில் உள்ள ஸ்டிராப்ஸ் சரிவரவேலை செய்யாததால் மாற்று ஹெல்மெட் வாங்க அணியின் உதவியை நாடிய அவரால் உடனே பேட்டிங்கிற்கு தயாராக முடியவில்லை. இதையடுத்து, பங்களாதேஷ் அணி கப்டன் அவுட் கேட்டு முறையிட்டதால் டைம் அவுட் விதிகளின் படி நடுவர் அவுட் கொடுத்து விட்டார்.

ஹெல்மெட் ஸ்ட்ராப்ஸ் பிரச்சினை, அதனால்தான் லேட் ஆனது என்றும் அப்பீலை வாபஸ் பெறும்படியும் கப்டன் ஷாகிப் அல் ஹசனிடம் மேத்யூஸ் முறையிட்டார்.ஆனால் ஷா கிப் அல் ஹசன் 'ஸ்பிரிட் ஆஃப் கிரிக்கெட்' எல்லாம் பார்க்காமல் விதிமுறையின் கீழ் அப்பீலை வாபஸ் பெறமாட்டேன் என்று மறுத்துவிட்டார். இதனையடுத்து, விரக்தியில் மேத் யூஸ் வெளியேறினார்.

# பரபரப்பான போட்டியில் பங்களாதேஷ் வென்றது

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 38 ஆவது போட்டியில் இலங்கைக்கு எதிராக விளையாடிய பங்களாதேஷ் 3 விக்கெட்களால் வெற்றி பெற்றது. பங்களாதேஷ் ஆறு தோல்விகளுக்குப் பின்னர் வெற்றிபெற்று அரை இறுதி வாய்ப்பைத் தக்கவைத்துள்ளது.

டெல்லியில் உள்ள அருண் ஜெட்லி கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் பந்து வீச்சைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவர்களில் 279 ஓட்டங்கள் எடுத்தது. அசலங்கா 108 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

280 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கைவிரட்டிய பங்களாதேஷ் 41.1 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 282 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது

நஜ்முல் ஹூசைன் ஷாண்டோ மற்றும்ஷகிப் அல்ஹசன் இணைந்து அபார கூட்டணி அமைத்தனர். இருவரும் 169 ஓட்டங்களுக்கு பார்ட்னர்ஷிப் அமைத்தனர். ஷகிப், 65 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 101 பந்துகளில் 90 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் ஷாண்டோ. ஷகிப் அல் ஹசன், ஆட்டநாயகன் விருதை வென்றார். இத்தொடரில் விளையாடிய முதல் போட்டியில் ஆப்கன் அணிக்கு எதிராக பங்களாதேஷ் வெற்றி பெற்றிருந்தது. அதன் பின்னர் இங்கிலாந்து, நியூஸிலாந்து, இந்தியா, தென் ஆபிரிக்கா, நெதர்லாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு எதிராக தோல்வியைத்தழுவியது. இந்தப் போட்டியில் வெற்றி பெறாக வேண்டிய நெருக்கடியில் இருந்தது.




இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 07.11.2023 அன்று வெளியிடப்பட்டது.